# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TAMIL WORKSHEET - IX STD ( 2017-2018 )

1) **கீழுள்ள உரைநடையைப் படித்து, அதன்திரண்ட கருத்தைச் சுருக்கி எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

சஞ்சீவி மலையில் குயில்கள் மகிழ்வோடு கூவிக் கொண்டிருக்கும். தோகை அழகுடைய மயில்கள் மழை மேகத்தைக் கண்டு நடனம் ஆடிக் கொண்டிருக்கும். மணத்துடன் நல்ல குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கும். கண்ணாடி போன்ற தெளிந்த நீருடன் விளங்கும் சுனைகளாகிய ஊற்றுகள் பல அங்கே உண்டு. அத்தகைய மலைப்பகுதிக்கு வேட்டுவப் பெண்கள் விளையாடுவதற்காகச் செல்லும் பழக்கம் உண்டு.காட்டில் வாழும் மறவர்குல வீரர்களும் அங்கே செல்லும் பழக்கம் உண்டு.அவ்வாறு வந்த பெண்களில் சிலரும், ஆடவர்களில் சிலரும் ஒருவரை ஒருவர் கண்டு, அன்பு கொண்டு, திருமணம் செய்து கொள்ளுதலும் உண்டு. இத்தகைய சிறப்புகளோடு விளங்கும் இடமே, " சஞ்சீவி பர்வதம் " என்னும் மலைச் சாரல் பகுதியாகும்.

2 ) **கடிதம் எழுதுக.**

1. கோடைச் சுற்றுலா பற்றி தோழன் / தோழிக்கு ஒரு கடிதம் வரைக.
2. பேருந்து வசதி வேண்டி விண்ணப்பம் எழுதுக.
3. பரிசு பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.
4. காணாமல் போன பொருளைக் கண்டு பிடித்துத் தருமாறு விண்ணப்பம் எழுதுக.

3 ) **கட்டுரை எழுதுக.**

1. திருக்குறளின் பெருமைகள்.
2. கோடைக்காலம்
3. இன்பச்சுற்றுலா
4. இந்தியாவின் இயற்கை அழகு

4 ) **சான்று தருக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | எண்ணல் அளவை ஆகுபெயர் | 6. | இடப்பெயர்ப் பகுபதம் |
| 2. | நீட்டல் அளவை ஆகுபெயர் | 7. | புளிமா |
| 3. | பெயர்ப் பகுபதம் | 8. | செய்யுளிசை அளபெடை |
| 4. | நிரையசை | 9. | சொல்லிசை அளபெடை |
| 5. | நேரசை | 10. | ஒற்றளபெடை |

5 ) **இலக்கணக்குறிப்பு தருக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வரனசைஇ இன்னும் உள்ளேன் | 4. | ஒன்று பெற்றால் ஒளிமயம் |
| 2. | கெடுப்பதூஉம் | 5. | அரங்ங்கம் |
| 3. | நேர் / நேர் | 6. | உறா அர்க் குறுநோய் உரைப்பாய் |

6) **பின்வரும் திருக்குறள்களில் விடுபட்ட சொல்லை நிரப்பி எழுதுக.**

1. ________________ தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2. துறந்தாரின் தூய்மை உடையர் ____________
   இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

3. ____________ மிக்கவை செய்தாரைத் தாம்தம்
   தகுதியான் வென்று விடல்

4. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
   ____________ பொன்போற் பொதிந்து.

7) **விரிவான விடை தருக.**

1. இந்திய மொழிக்குடும்பங்கள் பற்றி எழுதுக.
2. திராவிட மொழிக்குடும்பம் பற்றி எழுதுக.
3. இக்கால மரபுக் கவிஞர்கள் இருவரின் கவித்திறத்தை விளக்குக.
4. சமுதாய மேம்பாட்டிற்கு பாரதியின் பங்களிப்பு யாது ?
5. கப்பலின் தோற்றத்தைப் புறநானூறு எவ்வாறு உவமிக்கிறது ?
6. பாரதிதாசனின் கவிதைப் போக்கினைப் பற்றி எழுதுக.

8) **விரிவான விடை தருக.**

1. பொறையுடைமையின் சிறப்புகள் யாவை ?
2. இறைவரின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை ?
3. மன்னன் விதுரனிடம் யாது கூறி அனுப்பினான் ?
4. பிறர் செய்த தீங்கினை எங்ஙனம் பொறுத்தல் வேண்டும் ?
5. ஓய்வும், பயனும் பற்றிப் பெருஞ்சித்திரனாரின் கருத்து யாது ?
6. இறைவனுக்கும், நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்க.

9) **துணைப்பாட கட்டுரை எழுதுக.**

கண்ணதாசனின் கவியின்பத்தை விவரி.